**செய்தி வெளியீடு எண்.588** **நாள்.17.9.2007**

சென்னை, சமூகப் பாதுகாப்புத்துறை யூனிசெப் உதவியுடன் ஏற்பாடு செய்த குழந்தைகள் நலக்குழு தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான மூன்று நாள் பயிற்சி முகாமினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் டாக்டர்(திருமதி) பூங்கோதை ஆலடி அருணா அவர்கள் 17.9.2007 அன்று துவக்கி வைத்து உரையாற்றினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகுந்த இடர்பாடுகளுக்குள்ளாகியுள்ள சிறார்கள், துன்புறுத்தலுக்குள்ளாகியுள்ள சிறார்கள், மற்றும் தொழிற்சாலைகளில் பணியாற்றும் சிறார்கள் குறித்து கவலை தெரிவித்தார். குழந்தைகளை வேலைக்கு அமர்த்தும் தொழிற்சாலைகள் மீதும் குழந்தை தொழிலாளர்கள் குறித்தும் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார். குழந்தைகள் நலக்குழு தங்களிடம் வரும் விசாரணைகளை ஒரு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க ஏதுவாக காவல் துறை மற்றும் நீதிமன்றம் மூலமாகவும் விடாமுயற்சியுடன் ஒருங்கிணைந்தும் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர்கள் குழந்தைகளுக்காக தங்கள் உள்ளார்ந்த மனதோடு உழைக்க வேண்டும் என்றும் தங்களால் முடிந்த வரை நல்லது செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார். குழந்தைகளின் நலனுக்காக பதினொன்றாம் ஆண்டின் நலத் திட்ட நிதியில் கூடுதலாக ஒப்பளிப்பு செய்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் பிரதமர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

இல்லங்களில் உள்ள சிறுவர்களின் நலனுக்காக அரசு சமீபத்தில் சில கூடுதல் திட்டங்களை அறிவித்ததை அரசுச் செயலாளர் அவர்கள் கூறினார். சிறுவர்களின் நலனுக்காக குறிப்பாக பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு புறம்பான சிறுவர்களின் நலனுக்காக அரசு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பொது மக்கள் மற்றும் கிராம கண்காணிப்புக்குழுக்களுடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று மேலும் அவர் கூறினார்.

யூனிசெப் நிறுவன அலுவலர் பார்பரா உறாதர்லி அவர்கள் குழந்தைகள் சட்டம், பணியாளர்களுக்கான பயிற்சி மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பான சூழலை அமைப்பதற்கு சமூகப் பாதுகாப்புத்துறைக்கு தொடர்ந்து யூனிசெப் ஆதரவினை அளிக்க உறுதி அளித்தார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.